**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 254/2018**

2022 வது ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ம் நாள் P.W.1 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.கணேசன் | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.பண்டாரம் | கிராமம் : | |
| வயது : | 62 | மதம் : | |

**27.09.2022 முதல் விசாரணை:** நான் வாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். 07.04.1997 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சாஆ.1 ஆகும். மாநகராட்சி தீர்வை ரசீதுகள் அசல் வா.சா.ஆ.2 ஆகும். மின் கட்டண ரசீதுகள் அசல் வா.சா.ஆ.3 ஆகும். புகைப்படம் மற்றும் குறுந்தகடு வா.சா.ஆ.4 ஆகும். அரசுவழிகாட்டி மதிப்பீடு வா.சா.ஆ.5 ஆகும். குடிநீர் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ.6 ஆகும். மாதிரி வரைபடம் வா.சா.ஆ.7 ஆகும்.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.254 /2018**

30.11.2022 – வா.சா.1 திரு.கணேசன்

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரச்சனைக்குரிய தாவா சொத்து 1ம் தபசில் 3ம் அயிட்ட சொத்து என்றால் சரிதான். பிராதில் 3ம் அயிட்ட சொத்து பொது நடைபாதை அதில் பிரிவின்றி உபயோகித்து கொள்ளும் 3ல் 1 பங்கு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
2. வா.சா.ஆ.1ன் அசல் என் கைவசம் உள்ளது. அது 07.04.1997 தேதியிட்ட கிரைய ஆவணம். அந்த கிரையத்திற்கு முன்பாக 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான ரகுநாதன் என்பவர் வா.சா.ஆ.1க்கு முன்பாகவே தாவா 3ம் அயிட்ட சொத்தின் கீழ்பக்கம் உள்ள சொத்தை கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரியல்ல.
3. வா.சா.ஆ.1 கிரையம் பெறும் காலத்தில் 3ம் அயிட்ட சொத்தின் கீழ்பக்கம் வீடு இருந்தது. அது சுந்தர நாடார் வீடு. சுந்தரநாடாரிடமிருந்து ரகுநாதன் கிரையம் பெற்றார். வா.சா.ஆ.1ல் 3ம் அயிட்ட சொத்தின் கிழக்கு எல்கையாக சங்கரலிங்க வகையறா மனை என கூறியுள்ளது தவறு என்றால் சங்கரலிங்கம் என்பவர் சுந்தரநாடாரின் தந்தை. சங்கரலிங்க நாடார் சுந்தர நாடாரின் தந்தை என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.
4. மேற்படி தகவல் இருளப்ப நாடார் சொல்லி எனக்கு தெரியும். ரகுநாதனுக்கு கொடுத்த கிரைய ஆவணத்தில் சுந்தரநாடாரின் பெயர் E.சுந்தரநாடார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் சொத்து விபரம் சரியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ 7 ல் 3 ம் அயிட்ட சொத்திற்கு கீழ்பக்கம் சங்கரலிங்க நாடார் மனை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிான். எனவே வா.சா.ஆ.7 ஆவணமும் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சங்கரலிங்க நாடார் சுந்தர நாடாரின் தந்தை கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் கிழக்கே உள்ள வீட்டிற்கும், அதற்கு மேற்கே உள்ள இருளப்பநாடார் வீட்டிற்கும் இடையே உள்ள பகுதி தான் தாவா 3 ம் அயிட்ட சொத்து என்றால் சரிதான். அது நடைபாதை.

6. வா.சா.ஆ.1 ல் இருளப்ப நாடாருக்கு அரசாங்கத்திலிருந்து வழங்கப்பட்ட சொத்து. வா.சா.ஆ.1 க்கு முன் ஆவணங்கள் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. வா.சாஆ.,1 கிரையம் பெறும்போது அதன் முன் ஆவணங்களை நான் பார்க்கவில்லை. வா.சா.ஆ.1 ல் சொத்து விபரங்கள் எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அது இருளப்பநாடார் கூறியதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. சொத்தை கிரையம் பெறும் போது சொத்து விற்பவருக்கு எப்படி பாத்தியப்பட்டது என தெரியாமல் கிரையம் பெற இயலாது என்றால் சரிதான். சர்வே எண்.99/6 ல் 1 ம் தபசில் 1 ம் அயிட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.99/5 ஐ பொறுத்தாவது ஏதாவது ஆவணம் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா 3 ம் அயிட்ட சொத்து சர்வே எண்.99/5 ல் தான் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.99/5 ல் தான் உள்ள சொத்தை தான் ரகுநாதன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

8. ரகுநாதன் வீட்டின் மேற்கு புற சுவரின் மேற்கு முகப்பை பராமரிப்பதற்கு தாவா 3 ம் அயிட்ட சொத்தை தவிர 1,2 பிரதிவாதிகளுக்கு வேறு வழி கிடையாது என்றால் சரிதான். எனக்கு தெரிய ரகுநாதன் வசிக்கும் வீடு எத்தனை ஆண்டு காலமாக உள்ளது

என்றால் 1982 முதல். வீடு கட்டிய காலத்திலிருந்தே ரகுநாதன் வீட்டிற்கு மேற்கு சுவற்றிக்கு மேற்கில் பராமரிப்பதற்கு தாவா 3ம் அயிட்ட சொத்தை தான் பயன்படுத்தி வந்தனர் என்றால் சரியல்ல. 3ம் அயிட்ட சொத்து 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

9. என் மீது பாளையங்கோட்டை காவல்நிலையத்தில் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் நான் திருநெல்வேலி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றேன் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். அந்த முன் ஜாமீன் மனு 18.04.2018ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. எனவே பிராதில் நான் கூறியபடி 18.04.2018 முதல் 21.04.2018 வரை சென்னைக்கு சென்றிருந்ததாகவும், அந்த நேரத்தில் 1,2 பிரதிவாதிகள் வீடு கட்டி அதில் ஜன்னல் மற்றும் சன்சேடுகள் அமைத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1.,2 பிரதிவாதிகள் ஏற்கனவே இருந்த வீட்டை தான் சீரமைத்தார்களே தவிர புதிதாக எந்த கட்டுமானமும் கட்டவில்லை என்றால் சரியல்ல.

11. 1, 2 பிரதிவாதிகள் மேற்கு சுவரில் ஏற்கனவே ஜன்னல், சன்சேடுகள் மற்றும் மழைநீர் செல்லும் குழாய் இருந்தன என்றால் சரியல்ல. மேற்கண்ட விவரபங்கள் அனைத்தும் எனக்கு தெரிந்திருந்தும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. முதல் விசாரணை தகவலை வழக்கறிஞருக்கு நான் தான் வழங்கினேன். 1,2 பிரதிவாதிகள் வீட்டிற்கு கிழக்கே ஒரு நடைபாதை உள்ளது. தாவா 3ம் அயிட்ட சொத்து 1,2 பிரதிவாதிகளுக்கு மட்டும் தனித்து

பாத்தியப்பட்டது என்றும், அதில் எனக்கு எந்த விதமான உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் நான் கூறுவது போல் பிராது 2ம் தபசில் சொத்தில் குறிப்பிட்டுள்ளது போல ஆக்கிரமித்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் என் மீது அ.வ.எண்.250/2018 பற்றி எனக்கு தெரியாது. பிராது பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.